நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்த மத்திய அரசுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு உரையாற்றிய அத்தனை பேருக்கும் என்னுடைய இதயமார்ந்த வணக்கத்தை, வாழ்த்துகளை வெளியிட்டு, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின் கருத்துகள் எனக்கும் ஏற்புடையது என்று எனது ஆதரவுக் கருத்தினை இந்த அவையில் பதிய விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

3. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த Call Attention-களை நேரம் போதாததால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) Zero Hour-ல் என்ன சொல்லுங்கள்.